# இன்றைய இறைவார்த்தை

# 15-07-2015

## ஆண்டின் பொதுக்காலம் 15ஆம் வாரம் – புதன்
## முதல் ஆண்டு

**முதல் வாசகம்:**

ஆண்டவரின் தூதர் ஒரு முட்புதரின் நடுவே
தீப்பிழம்பில் அவருக்குத் தோன்றினார்.

**விடுதலைப் பயண நூலிலிருந்து வாசகம். 3 : 1 – 6, 9 – 12**

அந்நாள்களில் மோசே மிதியானின் அர்ச்சகராகிய தம் மாமனார் இத்திரோவின் ஆட்டு மந்தையை மேய்த்து வந்தார். அவர் அந்த ஆட்டு மந்தையைப் பாலை நிலத்தின் மேற்றிசையாக ஓட்டிக் கொண்டு கடவுளின் மலையாகிய ஓரேபை வந்தடைந்தார். அப்போது ஆண்டவரின் தூதர் ஒரு முட்புதரின் நடுவே தீப்பிழம்பில் அவருக்குத் தோன்றினார். அவர் பார்த்தபோது முட்புதர் நெருப்பால் எரிந்து கொண்டிருந்தது. ஆனால் அம்முட்புதர் தீய்ந்து போகவில்லை. “ஏன் முட்புதர் தீய்ந்து போகவில்லை? இந்த மாபெரும் காட்சியைப் பார்ப்பதற்காக நான் அப்பக்கமாகச் செல்வேன்” என்று மோசே கூறிக்கொண்டார். அவ்வாறே பார்ப்பதற்காக அவர் அணுகி வருவதை ஆண்டவர் கண்டார். “மோசே, மோசே” என்று சொல்லிக் கடவுள் முட்புதரின் நடுவிலிருந்து அவரை அழைக்க, அவர் “இதோ நான்” என்றார். அவர், “இங்கே அணுகி வராதே. உன் பாதங்களிலிருந்து மிதியடிகளை அகற்றிவிடு. ஏனெனில் நீ நின்று கொண்டிருக்கிற இந்த இடம் புனிதமான நிலம்” என்றார். மேலும் அவர், “உங்கள் மூதாதையரின் கடவுள், ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோபின் கடவுள் நானே” என்றுரைத்தார். மோசே கடவுளை உற்று நோக்க அஞ்சியதால் தம் முகத்தை மூடிக்கொண்டார். அப்போது, “இதோ! இஸ்ரயேல் மக்களின் அழுகுரல் என்னை எட்டியுள்ளது. மேலும் எகிப்தியர் அவர்களுக்கு இழைக்கும் கொடுமையையும் கண்டுள்ளேன். எனவே இப்போதே போ. இஸ்ரயேல் இனத்தவராகிய என் மக்களை எகிப்திலிருந்து நடத்திச் செல்வதற்காக நான் உன்னைப் பார்வோனிடம் அனுப்புகிறேன்.” மோசே கடவுளிடம், “பார்வோனிடம் செல்வதற்கும், இஸ்ரயேல் மக்களை எகிப்திலிருந்து அழைத்துப் போவதற்கும் நான் யார்?” என்றார். அப்போது கடவுள், “நான் உன்னோடு இருப்பேன். மேலும் இம்மக்களை எகிப்திலிருந்து அழைத்துச் செல்லும்போது நீங்கள் இம்மலையில் கடவுளை வழிபடுவீர்கள். நானே உன்னை அனுப்பினேன் என்பதற்கு அடையாளம் இதுவே” என்றுரைத்தார்.

**ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.**
**இறைவா! உமக்கு நன்றி.**

**பதிலுரைப்பாடல்:**
**திருப்பாடல்கள்: 103 : 1 – 2, 3 – 4, 6 – 7 (பல்லவி 8a)**
**பல்லவி: ஆண்டவர் இரக்கமும் அருளும் கொண்டவர்.**

1. என் உயிரே! ஆண்டவரைப் போற்றிடு! என் முழு உளமே! அவரது திருப்பெயரை ஏத்திடு! என் உயிரே! ஆண்டவரைப் போற்றிடு! அவருடைய கனிவான செயல்கள் அனைத்தையும் மறவாதே! பல்லவி

2. அவர் உன் குற்றங்களையெல்லாம் மன்னிக்கின்றார். உன் நோய்களையெல்லாம் குணமாக்குகின்றார். அவர் உன் உயிரைப் படுகுழியினின்று மீட்கின்றார். அவர் உனக்குப் பேரன்பையும் இரக்கத்தையும் மணிமுடியாகச் சூட்டுகின்றார். பல்லவி

3. ஆண்டவரின் செயல்கள் நீதியானவை. ஒடுக்கப்பட்டோர் அனைவருக்கும் அவர் உரிமைகளை வழங்குகின்றார். அவர் தம் வழிகளை மோசேக்கு வெளிப்படுத்தினார். அவர் தம் செயல்களை இஸ்ரயேல் மக்கள் காணும்படி செய்தார். பல்லவி

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி: (மத்தேயு: 11:25)**
அல்லேலூயா, அல்லேலூயா!
தந்தையே, விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவரே, உம்மைப் போற்றுகிறேன்.
ஏனெனில், விண்ணரசின் மறைபொருளைக் குழந்தைகளுக்கு வெளிப்படுத்தினீர்.
அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம்:**

ஞானிகளுக்கும் அறிஞர்களுக்கும் மறைத்துக்
குழந்தைகளுக்கு வெளிப்படுத்தினீர்.

✠ **தூய மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம். 11 : 25 – 27**

அக்காலத்தில் இயேசு கூறியது: “தந்தையே, விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவரே, உம்மைப் போற்றுகிறேன். ஏனெனில் ஞானிகளுக்கும் அறிஞர்களுக்கும் இவற்றை மறைத்துக் குழந்தைகளுக்கு வெளிப்படுத்தினீர். ஆம் தந்தையே, இதுவே உமது திருவுளம். என் தந்தை எல்லாவற்றையும் என்னிடத்தில் ஒப்படைத்திருக்கிறார். தந்தையைத் தவிர வேறு எவரும் மகனை அறியார். மகனும்

அவர் யாருக்கு வெளிப்படுத்த வேண்டுமென்று விரும்புகிறாரோ அவருமன்றி வேறு எவரும் தந்தையை அறியார்" என்று கூறினார்.

**கிறிஸ்து வழங்கும் நற்செய்தி.**
**கிறிஸ்துவே! உமக்குப் புகழ்.**

**சிந்தனைக்கு:**

இந்த பெரிய நாடுகள், பெரிய நகரங்கள், பெரிய மனிதர்கள், இந்த பெரியவைகள் எல்லாம் தண்டனைக்கும் தீர்ப்புக்கும் உள்ளாகும். அவ்வாரே ஞானிகள், விவேவிகள், அறிவாளிகள். ஆணவக்காரர்கள் இறைவனைக் காண மாட்டார்கள். ஆனால் சிறிய நாடுகள், சிறிய நகரங்கள், சிறியவர்கள், குழந்தைகள் கடவுளின் ஆசி பெருவார்கள். சிறியவர்கள், குழந்தைகள் எளிய மனத்தோர் இவர்கள் தெய்வத்தின் தரிசனம் பெருவார்கள். இவர்களிடத்தில் அகங்காரம், ஆணவம், ஆர்ப்பரிப்பு இல்லை. எதிலும் தெய்வத்தை நம்பி வாழும் பற்றுருதி கொண்டவர்கள். கடவுளைச் சார்ந்து வாழும் இவர்களைக் கடவுள் ஒருபோதும் கைவிடார். இத்தகையோருக்கு தெய்வத்தின் ஆசியில் குறையே இல்லை. எல்லாச் சூழலிலும் கடவுள் அவர்களோடு இருப்பார். தந்தை இறைவன் தாமே தம் திருவுளத்தை இத்தகையோருக்கு வெளிப்படுத்துவதால், எல்லா சூழலிலும் தெளிவு, திறமை, திடம் பெற்று மகிழ்வோடு வாழ மன வலிமை பெறுவர். எனவே நாம் இறைவனிடம் குழந்தை உள்ளம் கொண்டு நிறைவுடன் வாழ வரம் வேண்டி செபிப்போம். ஆசீர்.

**********